25.01.2017

தினமணி

# பயிர்க் கடன்கள் மீதான ரூ.660.50 கோடி வட்டி தள்ளுபடி: மத்திய அரசு நடவடிக்கை



ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கையால் கடும் பணத் தட்டுப்பாட்டைச் சந்தித்து வரும் விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில், குறுகிய கால பயிர்க் கடன்களுக்கு கடந்த நவம்பர்-டிசம்பர் மாத வட்டி ரூ.660.50 கோடியை மத்திய அரசு செவ்வாய்க்கிழமை தள்ளுபடி செய்தது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தில்லியில் செவ்வாய்க்கிழமை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், கூட்டுறவு வங்கிகளில் குறுகிய கால பயிர்க் கடன்களைப் பெற்றுள்ள விவசாயிகள் கடந்த நவம்பர், டிசம்பர் ஆகிய 2 மாதங்களுக்கு செலுத்த வேண்டிய ரூ.660.50 கோடி மதிப்பிலான வட்டியைத் தள்ளுபடி செய்வது என்று முடிவெடுக்கப்பட்டது. இத்தகவலை, அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின் மத்திய வேளாண்துறை அமைச்சர்

ராதாமோகன் சிங், பிடிஐ செய்தியாளரிடம் தெரிவித்தார். இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் கடந்த ஆண்டு (2016) ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் 30-ஆம் தேதி வரை அளித்துள்ள பயிர்க் கடன்கள் மீதான கடந்த நவம்பர், டிசம்பர் ஆகிய இரு மாதங்களுக்கான வட்டித்தொகையான ரூ.660.50 கோடியைத் தள்ளுபடி செய்யவும், இதனால் வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மேற்கண்ட தொகையுடன் மேலும் ரூ.400 கோடியையும் அவற்றுக்கு ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஏற்கெனவே, இந்த இரு மாதங்களுக்கு வட்டியைச் செலுத்திய விவசாயிகளுக்கு அந்தத் தொகை திருப்பி அளிக்கப்படும். அத்தொகையானது அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டதால் விவசாயிகள் சிரமங்களைச் சந்தித்து வருவதைக் கருத்தில்கொண்டு குறுகிய காலக் கடன்கள் மீதான வட்டியை அரசு தள்ளுபடி செய்துள்ளது. மேலும், கூட்டுறவு வங்கிகளுக்கு அளிப்பதற்காக நபார்டு வங்கிக்கு நடப்பு நிதியாண்டில் ரூ.20,000 கோடியை ஒதுக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மல்பெரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்புப் பயிற்சி**

அரியலூர் மாவட்டம், தழுதாழைமேடு கிராமத்தில் ஜயங்கொண்டம் வட்டார வேளாண் துறை சார்பில்,அட்மா

திட்டத்தின் கீழ் மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்புப் பறிச்சி செவ்வாய்க்கிழமை அளிக்கப்பட்டது. பயிற்சியை வேளாண் உதவி இயக்குநர் (பொ) காசிநாதன் தொடக்கிவைத்துப் பேசினார்,



திருச்சி மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி செல்வராசு கலந்து கொண்டு, மல்பெரி சாகுபடியில் நடவு, நீர் நிர்வாகம், உர நிர்வாகம், களை நிர்வாகம், இலைகள் பராமரிப்பு, கொட்டகை அமைப்பு மற்றும் பராமரிப்பு, பட்டுப் புழுக்களுக்கு உணவளிக்கும் முறை, நோய் கட்டுப்பாட்டு முறை, பட்டுக் கூடுகள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளித்தார்.

பட்டு வளர்ச்சித் துறை ஆய்வாளர் உலகநாதன், துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும், பட்டுப் புழுக்கள் வளர்ப்பின்போது கடைப்பிடிக்க வேண்டிய பராமரிப்பு முறை குறித்து விளக்கினார்.

பின்னர் விவசாயிகள் அருகிலுள்ள மல்பெரி சாகுபடித் திடலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, வயலில் மண் ஆய்வின்படி உரமிடுதல், நீர் மற்றும் களை நிர்வாக முறைகள் பற்றி விளக்கப்பட்டது. ஏற்பாடுகளை இளநிலை ஆய்வாளர் ஜோதி செய்திருந்தார். தழுதாழைமேடு கிராமத்தைச் சேர்ந்த 40 விவசாயிகள் மற்றும் பண்ணை

மகளிர் குழுவினர்கள் பங்கேற்றனர்.அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் முருகன் வரவேற்றார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கீத பிரியா நன்றி கூறினார்.

**கொப்பரை விலை உயர்வு: தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி**



தேங்காய் வரத்து குறைவால் கொப்பரை விலை கடந்த ஒரு வாரத்தில் படிப்படியாக உயர்ந்து கிலோ ரூ. 90-க்கு விற்பனையாவதால், தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

காங்கயம் பகுதியில் 1,400-க்கும் அதிகமான தேங்காய் உலர் களங்களும், 100-க்கும் மேற்பட்ட எண்ணை ஆலைகளும் செயல்பட்டு வருகின்றன. இதுதவிர தேங்காய் பவுடர் ஆலைகளும் உள்ளன. இந்திய அளவில் தேங்காய்த் தொழிலில் காங்கயம் முதலிடம் பெற்று விளங்குகிறது. கொப்பரை விலையை நிர்ணயம் செய்யும் கேந்திரமாகவும் காங்கயம் விளங்கி வருகிறது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் கேரளம், கர்நாடகம் ஆகிய பகுதிகளிலிருந்து தேங்காய்கள்

கொள்முதல் செய்யப்பட்டு, இங்குள்ள உலர் களங்களில் உடைத்து உலர்த்தப்படுகிறது. இவ்வாறு உலர்த்தப்படும் கொப்பரை நேரடியாக வட மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இதுதவிர இங்குள்ள ஆலைகள் மூலம் எண்ணெயாக மாற்றப்பட்டும் வட மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. மேலும், சில்லறை வணிகர்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகிறது.

புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காங்கயத்தில் குடும்பத்துடன் தங்கி இந்தத் தொழிலில் பணியாற்றி வருகின்றனர்.
கடந்த சில ஆண்டுகளாக தேங்காய்த் தொழிலில் ஏற்பட்ட பல்வேறு பிரச்னைகளால் தொய்வான நிலை ஏற்பட்டது. தற்போது அதிலிருந்து மீண்டு வந்து கொண்டுள்ளது.

கடந்த வாரத்தில் கொப்பரை கிலோ ரூ. 72-க்கும், 15 கிலோ கொண்ட ஒரு டின் எண்ணெய் ரூ. 1,700-க்கும் விற்பனையானது. தேங்காய்த் தூள் கிலோ ரூ. 130 ஆக இருந்தது. பின்னர் இந்த விலை படிப்படியாக உயர்ந்து, தற்போது ஒரு கிலோ கொப்பரை ரூ. 90-க்கும், 15 கிலோ கொண்ட ஒரு டின் தேங்காய் எண்ணெய் ரூ. 2 ஆயிரத்துக்கும், 1 கிலோ தேங்காய்த் தூள் ரூ. 160-க்கும் விற்பனையாகிறது.

இந்த விலை உயர்வு குறித்து தேங்காய் கள உரிமையாளர்கள் கூறுகையில், "காங்கயம் உலர் களங்களுக்கு வரும் தேங்காயின் ஒரு பகுதி தற்போது மட்டையுடன் கர்நாடக மாநிலம், டிப்தூரில் செயல்பட்டு வரும் தேங்காய்த் தூள் கம்பெனிகளுக்கு அனுப்பப்படுகிறது. காரணம் தற்போது தேங்காய்த் தூள் விலை

உயர்ந்துள்ளதால், தேங்காய்த் தூள் கம்பெனிகள் தேங்காய் கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளனர். இதன் காரணமாக உலர் களங்களுக்கு தேங்காய் வரத்து குறைந்து போயுள்ளது. இதையடுத்து கொப்பரை விலை உயர்ந்துள்ளது என்றனர். இந்த விலை உயர்வு காரணமாக தேங்காய் கொள்முதல் விலை அதிகரித்திருப்பதால், தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பருத்தி!**



தருமபுரி மாவட்டத்தின் பிரதான வேளாண் உற்பத்தி வகைகளில் 4-ஆம் இடத்தைப் பெற்றிருக்கும் பருத்தி சாகுபடி, நிகழாண்டு வறட்சியால் கடுமையான பாதிப்பைக் கண்டிருக்கிறது.

விவசாயமே மையத் தொழிலான தருமபுரி மாவட்டத்தில் பரவலாக, 8,500 ஹெக்டேர் பரப்பளவில் நிகழாண்டு பருத்தி விதைக்கப்பட்டது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பே நமது நிலங்களை ஆக்கிரமித்துவிட்ட பிடி ரக பருத்தி விதை வகைகளில் வரலட்சுமி, பன்னி போன்ற ரகங்கள் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு விதைக்கப்பட்டன. பிடி ரகங்களுக்கான இயல்பே அதிக தண்ணீர் வசதி கொண்ட

நிலங்களில் மட்டுமே நல்ல விளைச்சலைத் தரும். ஏற்கெனவே தண்ணீர் வசதி குறைந்த மேட்டுப்பாங்கான நில அமைப்பைக் கொண்ட தருமபுரி மாவட்டத்துக்கு கூடுதலாக இந்த முறை வறட்சியும் கடுமையாகத் தாக்கியுள்ளது. இந்த நிலையில், பருத்தி சாகுபடி செய்த இடங்களில் அறுவடை கடந்த 15 நாள்களாக நடைபெற்று வருகிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பருத்திச் செடிகள் வழக்கமான விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கைக் கூடத் தரவில்லை என்கிறார் கம்பைநல்லூரை அடுத்த கடம்பரஅள்ளியைச் சேர்ந்த விவசாயி துரை.

தனது 3 ஏக்கர் நிலத்தில் வரலட்சுமி வகை பருத்தியை சாகுபடி செய்துள்ள அவர், தற்போது அறுவடைக் கூலிக்குக் கூட விளைச்சல் கிட்டவில்லை என வருத்தம் தெரிவிக்கிறார்.

மாவட்டம் முழுவதுமே இதே போன்ற நிலை இருப்பதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நாட்டுப் பருத்தி ரகங்கள் ஏக்கருக்கு ஒரு குவிண்டால் விளைச்சல் தரும் என்றால், பிடி ரக பருத்திச் செடிகள் 8 குவிண்டால் வரை விளைச்சல் தரக்கூடியவை. ஆனால், இப்போதுள்ள வறட்சி சூழலில் பிடி ரக பருத்தி ஏக்கருக்கு ஒரு குவிண்டால் கிடைத்தாலே அதிசயம் என்கின்றனர் விவசாய சங்கத்தினர். வறட்சி பாதிப்பு குறித்த கணக்கெடுப்பில் பருத்தி கணிசமான இடத்தைப் பெற்றிருப்பதாகவும், மாநில அரசுக்கு அவை அனுப்பி வைக்கப்பட்டு இழப்பீட்டைப் பெற்றுத் தரவுள்ளதாகவும் வேளாண் அதிகாரிகள் உறுதியளிக்கின்றனர்.